10 JAN 1996

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

# 1995 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம்

---

*(1995, ஒற்றோபர் மாதம் 19 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

**அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது**

---

*1995 ஒற்றோபர் மாதம் 20 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

**இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது**

---

கொழும்பு 7, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை சதம் : 75 தபாற் செலவு : ரூபா 2.00

*1995 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம்*

*[1995, ஒக்ரோபர் மாதம் 19 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

ச. வ.—ஓ. — 3/95

**1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1995 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். **சுருக்கப் பெயர்.**

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படுவதான) 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 303 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "ஒரு தவறுக்காக இரண்டாண்டுகளை விஞ்சாத ஒரு காலப்பகுதிக்கு, .................. எனக் கட்டளையிடலாம்." என்ற சொற்களுக்குப் பதிலாக, "ஒரு தவறுக்காக இரண்டாண்டுகளை விஞ்சாத ஒரு காலப்பகுதிக்கு, விதிக்கப்பட்ட மறியற்றண்டனைத் தீர்ப்பானது, கட்டளை சார்ந்த மறியற்றண்டனைத் தீர்ப்பாகவுள்ள வதேனும் விடயத்திற்றவிர,............ எனக் கட்டளையிடலாம்." என்ற சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது. **1979 ஆம் ஆண்டின 15 ஆம் இலக்கச் சட்டத்தின் 303 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

3. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்திற்கான முதலாம் அட்டவணை, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— **1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கச் சட்டத்திற்கான முதலாம் அட்டவணையைத் திருத்துதல்.**

(1) 286 ஆம் பிரிவு தொடர்பிலான பதிவீடுகளை உடனடுத்துப் பின்வரும் பதிவீடுகளை உட்புகுத்துவதன் மூலமும:—

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| "286அ | பிள்ளைகள் தொடர்பிலான ஆபாச வெளியீடுகளும் வெளிக் காட்டல்களும் | மேற்படி | மேற்படி | மேற்படி | மேற்படி | இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாததும் பத்தாண்டுகளுக்கு மேற்படாததுமான இருவகையிலொரு வகை மறியற்றண்டனை அத்துடன் குற்றப்பணத்திறைாலும் தண்டிக்கப்படலாம். | நீதிவான் நீதிமன்றம்". |

(2) 302 ஆம் பிரிவு தொடர்பிலான பதிவீட்டை உடனடுத்துக் காணப்படும் தலைப்பை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் தலைப்பை இடுவதன்மூலமும்:—

"கருச்சிதைவேற்படுத்தல்; பிறவாத பிள்ளைக்கு ஊறுசெய்தல்; சிசுக்களைக் கைவிடுதல்; பிள்ளைகளைக் கொடூரமாக நடாத்துதலும், பிள்ளைப்பேற்றை மறைத்தலும்.";

(3) 308 ஆம் பிரிவு தொடர்பிலான பதிவீடுகளை உடனடுத்துப் பின்வரும் பதிவீடுகளை உட்புகுத்துவதன்மூலமும்:—

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| "308அ | கொடூரம் விளைவித்தல் | மேற்படி | மேற்படி | பிணையிற் செல்ல அனுமதித் தற்பாலனது | மேற்படி | இரண்டு ஆண்டுகளுக்கு குறையாததும் பத்தாண்டுகளுக்கு மேற்படாததுமான இரு வகையிலொரு வகை மறியற்றண்டனை அத்துடன குற்றப்பணத்தினாலும் நட்டவீட்டினாலும் தண்டிக்கப்படலாம். | நீதிவான் நீதிமன்றம்". |

(4) 345 ஆம் பிரிவு தொடர்பிலான பதிவீடுகளை நீக்குவதன்மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வரும் பதிவீடுகளை இடுவதன்மூலமும்:—

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| "345 | பாலியல் ரீதியான துன்புறுத்தல் | ஷ | ஷ | ஷ | ஷ | ஐந்து ஆண்டுகளவரை நீடிக்கக்கூடிய ஒரு காலப்பகுதிக்கான இரண்டிலொரு வகையான மறியற்றண்டனை அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும் நட்டவீடும். | நீதிவான் நீதிமன்றம்." |

(5) 349 ஆம் பதிவை உடனடுத்துக் காணப்படும் தலைப்பை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் தலைப்பை இடுவதன்மூலமும்:—

"ஆட்கடத்தல், ஆட்கவர்தல், சிறுபிள்ளை விபச்சாரம், சிறுபிள்ளைகளை விற்பனைசெய்தல், வலோற்காரமாக தொழில் புரியச்செய்தல்."

(6) 360 அ என்னும் பிரிவு தொடர்பிலான எல்லாப்பதிவீடுகளையும் நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பதிவீடுகளை இடுவதன் மூலமும்:—

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| "360அ | விபச்சாரியொருவராகச் செய்தல் | பிடியாணையின்றிக் கைது செய்தல் ஆகாது | ஷ | ஷ | ஷ | இரண்டு ஆண்டுகளுக்குக்குறையாததும் பத்து ஆண்டுகளுக்கு மேற்படாததுமான இருவகையிலொருவகை மறியற்றண்டனை அத்துடன் குற்றப் பணத்தினாலும் தண்டிக்கப்படலாம் | நீதிவான் நீதிமன்றம்." |

(7) 360அ பிரிவு தொடர்பிலான பதிவீடுகளை உடனடுத்துப் பின்வரும் புதிய பதிவீடுகளை உட்புகுத்துவதன் மூலமும்:—

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| "360ஆ | சிறுபிள்ளை விபச்சாரம் | ஷை | ஷை | ஷை | ஷை | ஐந்து ஆண்டுகளுக்குக் குறையாததும் இருபது ஆண்டுகளுக்கு மேற்படாததுமான இருவகையி லொருவகை மறியற்றண்டனை அத்துடன் குற்றப் பணத்தினுலும் தண்டிக்கப்படலாம் | நீதிவான் நீதிமன்றம் |
| 360இ | சிறுபிள்ளைகளை விற்பனை செய்தல் | ஷை | ஷை | ஷை | ஷை | இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாததும் இரு பதாண்டுகளுக்கு மேற்படாததுமான இருவகையி லொருவகை மறியற்றண்டனை அத்துடன் குற்றப் பணத்தினுலும் தண்டிக்கப்படலாம் | நீதிவான் நீதிமன்றம் |
| | தவருனது பிள்ளையொன்று தொடர்பாகப் புரியப்படுமாஞல் | ஷை | ஷை | ஷை | ஷை | ஐந்து ஆண்டுகளுக்குக் குறையாததும் இருபது ஆண்டுகளுக்கு மேற்படாததுமான இருவகையி லொருவகையான மறியற்றண்டனை அத்துடன் குற்றப்பணத்தினுலும் தண்டிக்கப்படலாம் | ஷை |

(8) 361 ஆம் பிரிவு தொடர்பிலான எல்லாப் பதிவீடுகளையும் நீக்குவதன்மூலமும்;

(9) 362 ஆம் பிரிவு தொடர்பிலான எல்லாப் பதிவீடுகளையும் நீக்குவதன்மூலமும்;

(10) 362 ஈ என்னும் பதிவீட்டை உடனடுத்துக் காணப்படும் தலைப்பை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய தலைப்பை இடுவதன் மூலமும்:—

"கற்பழிப்பும் பிறழ்புணர்ச்சியும்.".

(11) 364 ஆம் பிரிவு தொடர்பிலான பதிவீடுகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பதிவீடுகளை இடுவதன் மூலமும்:—

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| "364 | கற்பழித்தல் | பிடியாணையின் றிக்கைது செய யலாம் | மேறபடி | பிணையிற் அனுமதித் தற்பால தல்ல | மேற்படி | ஏழு ஆண்டுகளுக்குக் குறையாததும் இருபது ஆண்டுகளுக்கு மேற்படாததுமான கடூழிய மறி யற்றண்டனையும் குற்றப்பணமும், மேலும் பாதிப்புற்றவர்களுக்கு நீதிமன்றத்தினல் தீர் மானிக்கப்படும் ஒரு தொகை நட்டவீடும் அத்துடன் நட்டவீடு செலுத்தத்தவறும் விடயத்தில் இரண்டு ஆண்டு கள் வரையிலான மறியற்றண்டனையும் | நீதிவான் நீதிமன்றம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கற்பழிப்பு<br>(அ) பகிரங்க அலுவலர் ஒருவர் அவரது கட்டுப்பாட்டில் உள்ள பெண்மீது புரிதல். | ஷ | ஷ | ஷ | ஷ | பத்து ஆண்டுகளுக்குக் குறையாததும் இருபது ஆண்டுகளுக்கு மேற்படாததுமான கடூழிய மறியற்றண்டனையும் குற்றப்பணமும் நட்டவீடும் அத்துடன் நட்டவீட்டைக் கொடுக்கத்தவறும் பட்சத்தில இரண்டு ஆண்டுகள் வரையிலான மறியற்றண்டனையும்.<br>நீதிமன்றமானது குறித்த சில சந்தர்ப்பங்களில் பத்து ஆண்டுகளுக்குக் குறைவான தண்டனைத் தீர்ப்பையும் விதிக்கலாம். | நீதிவான் நீதிமன்றம் |
| (ஆ) ஒரு விளக்கமறியல் பெண்கள் அல்லது சிறுபிள்ளை நிறுவனம் முதலியவற்றின் முகாமையாளர் அல்லது ஏனைய பணியாட்டொகுதியினர் அங்கு உள்ளுறையும் பெண்மீது புரிதல் | ஷ | ஷ | ஷ | ஷ | | |
| (இ) ஓர் ஆசுபத்திரியின் முகாமையாளர் முதலியோர் அந்த ஆசுபத்திரியில் உள்ள ஒரு பெண்மீது புரிதல் | ஷ | ஷ | ஷ | ஷ | | |
| (ஈ) கர்ப்பிணிப் பெண்மீது புரிதல் | ஷ | ஷ | ஷ | ஷ | | |
| (உ) பதினெட்டு வயதுக்குக் கீழ்ப்பட்ட பெண்மீது புரிதல். | ஷ | ஷ | ஷ | ஷ | | |
| (ஊ) உள அல்லது உடல் இயலாமைக்குட்பட்ட பெண்மீது புரிதல். | ஷ | ஷ | ஷ | ஷ | | |
| (எ) ஆட்கள் கூட்டத்தினரால் புரியப்படுதல். | ஷ | ஷ | ஷ | ஷ | | |
| பதினாறு வயதுக்குக் கீழ்ப்பட்ட பெண்ணது அப்பெண் எவரேனும் ஆண் தொடர்பாக 364அ என்னும் பிரிவில் உறப்பட்ட எதேனும் உறவு முறையில் இருக்கின்றவிடத்து. | ஷ | ஷ | ஷ | ஷ | பதினைந்து ஆண்டுகளுக்குக் குறையாததும் இருபது ஆண்டுகளுக்கு மேற்படாததுமான கடூழிய மறியற்றண்டனையும், குற்றப்பணமும். | நீதிவான் நீதிமன்றம்.”. |

(12) 364அ என்னும் பிரிவு தொடர்பிலான பதிவீடுகளை நீக்குவதன் மூலமும், அதற்குப் பதிலாகப் பின்வரும் பதிவீடுகளை இடுவதன்மூலமும்:—

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| "364அ | (i) வனபுணாசசி | ஷை | ஷை | ஷை | ஷை | ஏழு ஆண்டுகளுக்குக் குறையாததும் இருபது ஆண்டுகளுக்கு மேற்படாததுமான கடூழிய மறியற்றண்டனையும், குற்றப்பணமும் | நீதிவான் நீதி மன்றம்.". |
| | (ii) தவறு புரிய எத்தனித்தல் | ஷை | ஷை | ஷை | ஷை | இரண்டாண்டுகளுக்கான இருவகையிலொரு வகை மறியற்றண்டனையும் குற்றப்பணமும் | |

(13) 364அ என்னும் பதிவீட்டை உடனடுத்துக் காணப்படும் தலைப்பை நீக்கிவிட்டுப் பின்வரும் புதிய தலைப்பை இடுவதன் மூலமும்:—

"இயற்கைக்குமாறான தவறுகளும் பாரிய பாலியல் துஷ்பிரயோகமும்".

(14) 365 ஆம் பிரிவு தொடர்பான பதிவீடுகளை நீக்கிவிட்டு அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் பதிவீடுகளைப் பதிவீடு செய்வதன் மூலமும்;—

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| "365 | இயற்கைக்கு மாறான தவறுகள் | மேற்படி | மேற்படி | மேற்படி | மேற்படி | பத்தாண்டுகளுக்கான இரு வகையிலொருவகையான மறியற்றண்டனையும் குற்றப்பணமும். | நீதிவான் நீதிமன்றம் |
| | பதினாறு வயதுக்கு உட்பட்ட ஆளொருவர் தொடர்பில பதினெட்டு வயதிற்கு மேற்பட்ட ஆளொருவரால் தவறு புரியப் பட்டிருப்பின் | ஷை | ஷை | ஷை | ஷை | பத்தாண்டுகளுக்குக் குறையாததும் இருபதாண்டுகளுக்கு மேற்படாததுமான கடூழிய மறியற்றண்டனையும், குற்றப்பணமும், நட்டவீடும் | ஷை ". |

(15) 365அ என்னும் பிரிவு தொடர்பான பதிவீடுகளை நீக்கஞ்செய்துவிட்டு அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் பதிவீடுகளை இடுவதன் மூலமும்:—

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| "365அ | ஓர் ஆள் மற்றொருவருக்குப் பாரிய ஒழுக்கக் கேடான செயலைச் செய்தல். | மேற்படி | பிடியாணை | மேற்படி | இணக்க முடியாதது மேற்படி | இரண்டாண்டுகள் வரையான இருவகையிலொரு வகை மறியற்றண்டனை, குற்றப்பணம் அல்லது இவை இரண்டும். | நீதிவான் நீதிமன்றம் |
| | பதினெட்டு வயதிற்கு மேற்பட்ட ஆளொருவரால் பதினாறு வயதுக்குக் குறைந்த ஆளொருவர் தொடர்பில இத்தவறு புரியப்பட்டால். | ஷை | ஷை | ஷை | ஷை | பத்தாண்டுகளுக்குக் குறையாததும் இருபது ஆண்டுகளுக்கு மேற்படாததுமான கடூழிய மறியற்றண்டனையும் குற்றப்பணமும், நட்டவீடும். | ஷை ". |

(16) 365ஆ என்னும் பிரிவு தொடர்பிலான பதிவீடுகளை உடனடுத்து, பின்வரும் பதிவீடுகளை இடுவதன் மூலமும்:—

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| "365ஆ | பாரிய பாலியல் துஷபிர யோகம் | ஷை | ஷை | ஷை | ஷை | ஏழாண்டுகளுக்குக் குறையாததும், இருபதாண்டுகளுக்கு மேற்படாததுமான கடூழிய மறியற்றண்டனையும் குற்றப்பணமும், நட்டவீடும். | நீதிவான் நீதிமன்றம். |
| | பதினெட்டு ஆண்டுகளுக்குக் குறைந்த வயதுடைய ஆள் தொடர்பில் தவறுபுரியப்பட்டிருப்பின். | ஷை | ஷை | ஷை | ஷை | பத்தாண்டுகளுக்குக் குறையாததும், இருபதாண்டுகளுக்கு மேற்படாததுமான கடூழிய மறியற்றண்டனையும், குற்றப்பணமும், நட்டவீடும் | ஷை ". |

(17) 365ஆ என்னும் பிரிவு தொடர்பிலான பதிவீடுகளை உடனடுத்துப் பின்வரும் புதிய தலைப்பை உட்புகுத்துவதன் மூலமும் —

"குறித்த சில தவறுகள் தொடர்பிலான விடயத்தை வெளியிடுதல்.".

(18) "குறித்த சில தவறுகள் தொடர்பிலான விடயத்தை வெளியிடுதல்" என்னும் தலைப்பை உடனடுத்துப் பின்வரும் பதிவுகளை உட்புகுத்துதல் மூலமும்:—

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| "365இ | குறித்தசில தவறுகள் தொடர்பிலான விடயத்தைவெளியிடுதல். | பிடியாணையின்றிக் கைது செய்தலாகாது | பிடியாணை | பிணையில் விடத்தக்கது | இணக்கத் தக்கது | இரண்டாண்டுகளுக்கு நீடிக்கக்கூடிய இருவகையிலொருவகை மறியற்றண்டனை, அல்லது குற்றப்பணம், அல்லது இரண்டும். | நீதிவான் நீதிமன்றம்.". |

4. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாட்டு) ரூபா 77; (வெளிநாடு) ரூபா 236; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆம் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ் வேர்க்ஸ் இல்லம், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.